தேனி மாவட்ட அம்மா நீதிபதி / அம்மா நீதிமன்றம், திருமருதம்

FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8364133

1. District மாவட்டம்: திருமருதபுரம் PS: மாதர் பிரிவு காவல்நிலையம் Year: ஆண்டு FIR No.: 02/26 முத.அ. எண் Date: 17.4.2026 நாள்

2. (i) Act சட்டம்: இந்திய தண்டனைச் சட்டம் Sections பிரிவுகள்: 120(B), 167, 468

(ii) Act சட்டம்: உரிமை தடுப்புச் சட்டம் 1958 Sections பிரிவுகள்: 13(1)(c), 13(1)(d) r/w 13(2)

(iii) Act சட்டம்: உரிமை தடுப்புச் சட்டத் திருத்தம் 2018 Sections பிரிவுகள்: 18(1)(a) r/w 13(2).

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 2016 to 2021.

Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : நேரம் 17-04-2026 at 12.00 hrs.

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் VOL - I. Time : நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் முதல் நிலை விசாரணை. அறிக்கையாக பெறப்பட்டது.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் மேலும் 50Km தொலைவில்.

Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி திரு மயில் பஞ்சாயத்து மேலை உலகப்பட்டி கிராமம், திருமருதபுரம் மாவட்டம்.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S: இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. இராகேஸ்வர் குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் (b) Father's/ Husband's Name : கோபாலன். தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1976 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் அரசுப்பணி. (g) Address : முகவரி தாயார் ஆனந்தப்பிரியா அவர்களை உரிமை தடுப்பு சட்டத்தின் கீழ் மீட்டு தரக்கோரி புகார் மனு.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary) தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

மேலும் 12ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- மேலும் தகவல் -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

குற்றம் சாட்டப்பட்டவர்கள்:-

1. திரு.அ.பாண்டி, வயது 63/25 த/பெ.அரசன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்), கடலாடி ஊராட்சி ஒன்றியம், தற்போது பணி ஓய்வு இராமநாதபுரம் ஊராட்சி ஒன்றியம், இராமநாதபுரம் மாவட்டம். (பணி ஓய்வு பெற அனுமதி மறுக்கப்பட்டவர்) (த.ப.நீ)
2. திருமதி.ஜி.மேகலா, வயது 59/25, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சிகள்) கடலாடி ஊராட்சி ஒன்றியம், இராமநாதபுரம் மாவட்டம். தற்போது உதவி இயக்குநர் /விரிவுரையாளர், மாநில ஊரக வளர்ச்சி பயிற்சி நிறுவனம், மறைமலை நகர் சென்னை. (பணிஓய்வு பெற அனுமதி மறுக்கப்பட்டவர்) (த.ப.நீ)
3. திரு.இ.மந்திரமூர்த்தி, வயது 59/25, ஒன்றிய பணி மேற்பார்வையாளர், கடலாடி ஊராட்சி ஒன்றியம், தற்போது முதுகுளத்தூர் ஊராட்சி ஒன்றியம், இராமநாதபுரம் மாவட்டம். (பணி ஓய்வு)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... DSP. Vaz ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
17-4-2026 at 13.00hrs

Name: பெயர் ..... B. கிராமசுப்பு வா
Rank: நிலை ..... தலைமை காவலர்
எண் 2092 ஆர்ம்ட் இராமநாதபுரம்

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண். 02/2026 பிரிவு 120(B), 167 இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவுகள் 13(1)(c), 13(1)(d) r/w 13(2) மற்றும் ஊழல் தடுப்பு (திருத்த) சட்டம், 2018 பிரிவு 13(1)(a) r/w 13(2) வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி

சமர்ப்பிக்கப்படுகிறது

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக விழிப்பு அறிக்கையின் அடிப்படையில் குற்ற அலுவலர்கள் மீதுள்ள குற்றச்சாட்டு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையின் தொடர்ச்சியாக, இயக்குநர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் குறிப்பாணை எண் PE 18/2025/RDP/RM, நாள் 09.01.2026 இன் படி, காலம் 3-ல் குறிப்பிடப்பட்ட எதிரிகள் மீது குற்ற எண் 02/2026, பிரிவு 120(B), 167 இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவுகள் 13(1)(c), 13(1)(d) r/w 13(2) மற்றும் ஊழல் தடுப்பு (திருத்த) சட்டம், 2018 பிரிவு 13(1)(a) r/w 13(2) ஆகிய சட்டப்பிரிவுகளின் கீழ் இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கில் இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் 1 வது எதிரியான திரு. Uபாண்டி என்பவர் கடந்த 13.04.2018 ஆம் தேதி முதல் 08.03.2019 ஆம் தேதி வரை வட்டார வளர்ச்சி அலுவலராகவும், 2 வது எதிரியான திருமதி.ம.மேகலா என்பவர் கடந்த 08.03.2019 ஆம் தேதி முதல் 17.11.2019 ஆம் தேதி வரை வட்டார வளர்ச்சி அலுவலராகவும், 3 வது எதிரியான திரு. ப. மந்திரமூர்த்தி என்பவர் கடந்த 25.04.2013 ஆம் தேதி முதல் 07.07.2021 வரை ஒன்றிய பணி மேற்பார்வையாளராகவும் பணியாற்றியுள்ளார்கள். மேற்படி எதிரிகள் ஊழல் தடுப்பு சட்டம், பிரிவு 2(c) இன் படி பொது ஊழியர்கள் ஆவார்கள்.

இராமநாதபுரம் மாவட்டம், கடலாடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஓரிவயல் பஞ்சாயத்தில் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா-கிராமின் (PMAY-G) திட்டத்தின் கீழ், அரசாணை எண் GO.(MS) No.150, நாள் 30.12.2010 இன் படி, 2016-2017 முதல் 2021-2022 வரை வீடு இல்லாத பயனாளிகளுக்கு மொத்தம் 94 வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றின் கட்டுமான பணிகளுக்கு ந.க. எண் R5/5456/2017, நாள் 19.07.2019 இன் படி மாவட்ட ஆட்சித் தலைவர் நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் SECC (Socio Economic and Caste Census) தரவின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளுக்கு, ஊராட்சி மன்ற தலைவர் தலைமையில் கிராம சபா கூட்டத் தீர்மானம் இயற்றப்பட்டு, மாவட்ட ஆட்சியரின் உத்தரவின் பேரில் வட்டார வளர்ச்சி அலுவலரால் வீடு கட்ட வேலை உத்தரவு வழங்கப்படும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகளால் வீடு கட்டும் பணி மேற்கொள்ளும் போது அடித்தளம், சன்னல் மட்டம், கூரை மட்டம் மற்றும் கட்டிடம் முடிந்த பின் என நான்கு கட்டங்களாக ஒன்றிய பணி மேற்பார்வையாளரால் மதிப்பீட்டு சான்றிதழ் (Valuation Certificate) பராமரிக்கப்பட்டு, உதவி பொறியாளரால் மேலொப்பம் செய்யப்பட்டு, வட்டார வளர்ச்சி அலுவலரால் சுருக்கொப்பம் செய்யப்பட்ட பின், FTO (Fund Transfer Order) மூலம் பயனாளிகளின் வங்கி கணக்கிற்கு தொகை விடுவிக்கப்பட வேண்டும்.

முதற்கட்ட விசாரணையின் போது கடந்த 2016-2021 காலகட்டத்தில் ஓரிவயல் பஞ்சாயத்தில் PMAY-G திட்டத்தின் கீழ் 15 பயனாளிகளுக்கான வீடுகள் கட்டியதில் முறைகேடுகள் நடந்துள்ளது தெரியவந்துள்ளது. மேற்படி மொத்தம் 15 பயனாளிகளில் 12 பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய 1198 மூடை சிமெண்ட் மற்றும் 3540 கிலோ கம்பிகள் வழங்கப்படாமல், (அரசு நிர்ணயித்த விலைப்படி ஒரு மூடை சிமெண்ட் ரூ.285/- வீதம் 1198 மூடைகளுக்கு ரூ.3,41,430/- மற்றும் ஒரு கிலோ கம்பி ரூ.50.50/- என்ற கணக்கில் 3540 கிலோ கம்பிக்கு ரூ.1,78,770/-) மொத்தம் ரூ.5,20,200/- அரசுக்கு நிதி இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் பயனாளிகளுக்கு வழங்கப்பட வேண்டிய சிமெண்ட் மூடை மற்றும் கம்பிகளை சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு வழங்காமல், அப்போது ஓரிவயல் பஞ்சாயத்து செயலராக பணியாற்றிய திரு.சரவணன் என்பவரிடம், அனுமதி சீட்டில் கையொப்பம் பெற்று பொருட்களை கொடுத்ததாக பொய்யான கணக்குகள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும் சாட்சிகளான 11 பயனாளிகளை விசாரணை செய்ததில் சிமெண்ட் மூடை மற்றும் கம்பிகளை பெறவில்லை என விசாரணையில் உறுதியாகியுள்ளது.

மேலும் 15 பயனாளிகளின் வங்கி கணக்குகளில் வீடு கட்டும் பணிக்காக நான்கு பகுதிகளாக அரசு தொகை வரவு வைக்கப்பட்டுள்ள போதும், சில பயனாளிகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்ட தொகையில் ஒரு பகுதியை எடுக்கவில்லை என்பதும் தெரியவந்துள்ளது.

ஆகவே குற்ற அலுவலர்களான திரு.U பாண்டி, திருமதி.ப.மேகலா மற்றும் திரு.ர. மந்திரமூர்த்தி ஆகியோர்கள் பயனாளிகளுக்கு சிமெண்ட் மற்றும் கம்பிகளை வழங்காமல் வேறு நபர்களிடம் கையொப்பம் பெற்று பொய்யான கணக்குகள் உருவாக்கி, ரூ.5,20,200/- நிதி இழப்பு ஏற்படுத்தி குற்றமுறு நடவடிக்கை செய்ததற்காக , மேற்படி நபர்கள் மீது பிரிவு 120(B), 167 இந்திய தண்டனைச் சட்டம் மற்றும் ஊழல் தடுப்பு சட்டம், 1988 பிரிவுகள் 13(1)(c), 13(1)(d) r/w 13(2) மற்றும் ஊழல் தடுப்பு (திருத்த) சட்டம், 2018 பிரிவு 13(1)(a) r/w 13(2) ஆகிய கீழ் குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது . முதல் தகவல் அறிக்கையின் அசலை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கு அனுப்பியும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

(ந.ராஜேஸ்வரி)
காவல் ஆய்வாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு,
இராமநாதபுரம்.
17.04.2026